88

தித்திப்பு

'என்னைச் சுத்த மடிசஞ்சியாக்கிவிட்டாயே? உன் சாமர்த்தியமல்லவா சாமர்த்தியம்! மணி பன்னிரண்டாகிறது. காலையில் சாப்பிட்ட ஒரு வாய் காப்பியுடன் என்னை உட்கார வைத்திருக்கிறாயே!'

'பண்டிகை,பருவம் என்றால் அன்று ஒரு நாளாவது நியம நிஷ்டையுடன் இருக்க வேண்டாமா? தினந்தான் நம் இஷ்டம்போல் இருக்கிறோம்!'

'பண்டிகை, பருவம், நியமம், நிஷ்டை–உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட பிறகுதான், இந்த வார்த்தைகளே என் காதில் படுகின்றன.'

'அந்த நாட்களிலேதான் தித்திப்பு–இன்று பொங்கல்–கரும்பு!'

'தித்திப்பு பொங்கலிலும் கரும்பிலுந்தானா என்ன?'

'பின் ,வேறு எதில்?'

'வாழ்க்கையில்–நீ இருக்கும் வாழ்க்கையில்!'

'போங்கள், இதுதான் உங்களுக்கு வேலை!' என்று ராதை பெருமை யுடன் புன்னகை செய்தாள்.

'வேறென்ன வேலை? உன்னைப் பார்த்த நாளே தான் என் வேறு வேலையெல்லாம் காற்றில் போய் விட்டதே!'

'என்ன வேலை?'

'நான் செய்வதாக இருந்த வேலை. ஆனால் ஒன்று ராதா! இந்தப் பண்டிகை பருவம் வந்தால்–'

'வந்தால் என்ன?'

'வந்தால் அன்று நீ வெகு ஜோராக இருக்கிறாய்!' என்று சொல்லிக் கொண்டே பாலகிருஷ்ணன் மனைவி முகத்தைப் பார்த்துப் பசியையும் மறந்தான்.

'ஆச்சு, வாத்தியார் வருகிற சமயந்தான். அவருக்கும் பாவம், நாலு இடத்தில் வேலை இருக்காதா? எனக்கும் அடுப்பண்டை அரை மணி

1943

வேலை இருக்கிறது!'

பாலகிருஷ்ணன் பேசவில்லை.

'ரொம்பப் பசிக்கிறதா? இன்னும் கொஞ்சம் காப்பி வேண்டுமானால் போட்டுக் கொடுக்கட்டுமா?' என்று ராதை இளகிக் கேட்டாள்.

'வேண்டாம், பாதகமில்லை' என்று பாலகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே வாத்தியார் ஓட்டமும் நடையுமாக உள்ளே வந்தார்.

'ஐயர்வாள், பூஜைக்கு எல்லாம் தயாராக இருக்கிறதா, உட்காருங்கள்!' என்று சொல்லிக் கொண்டு அவர், முற்றத்தில் -வெயிலில்-கோலம் போட்டு வைத்திருந்த இடத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்தார்.

ராதை பூஜைச்சாமான்கள் நிறைந்த தட்டையும் வெள்ளிப் பஞ்ச பாத்திர உத்தரணியையும் கொண்டு வந்து வைத்தாள். கரும்பைக் கொண்டுவந்து ஒரு புறம் வைத்தாள்.

பாலகிருஷ்ணன் பலகையில் உட்கார்ந்து வாத்தியார் சொன்னதை யெல்லாம் இயந்திரம்போலச் செய்தான். அவன் நினைவு மட்டும் ராதை தன்னை அடிமைப்படுத்தின வகையை நாடிச் சென்றது.

'அஸ்மாகம்னு சொல்றது; சக குடும்பானாம்–'

★★★

பாலகிருஷ்ணன் காலேஜில் புரட்சிக் கவி. பட்டணத்தில் ஹாஸ்டலில் படித்துக்கொண்டிருந்தான். மற்றக் காலேஜ் மாணவர்களைப்போல அவனும் 'கம்யூனிஸ்ட்' – பொதுவுடைமைவாதி. அதற்கு அடையாள மாக, நீண்ட மல் சராய், மல் ஜிப்பா – ஸ்லிப்பர்கள் – மற்றப்படி, கிராப், கண்ணாடி, பாழும் நெற்றி – அவற்றைச் சொல்ல வேண்டியதில்லை.

பி.ஏ.பரீட்சை முடிந்ததும் புரட்சி வேலை செய்வதற்காகப் பாட்டனார் இருந்த கிராமத்துக்குப் புறப்பட்டான். அங்கே 'கிஸான்'களிடையே பொதுவுடைமையைப் பிரசாரம் செய்யப்போவதாகக் 'கம்யூனிஸ்ட்' நண்பர்களிடம் திட்டம் போட்டுக்கொண்டு வந்தான்.

முதல் முதலாக அப்பொழுதுதான் அவன் கிராமத்தையே பார்த்தது. பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவன். ஆகையால் கிராமம் என்பது என்ன என்பதே அவனுக்குத் தெரியாது. அதன் இயல்பும் இருப்பும் அவனுக்குத் தெரியா. போனதுதான் தாமதம்; உடனே புரட்சித்தீயை அங்கே மூட்டி விடலாம் என்று துடித்துக்கொண்டு வந்தான்.

வந்த நாளே குடியானத்தெருப் பக்கம் போனான். அதுவரையில் பார்த்திராத மனிதன் வந்ததும் குழந்தைகள் பரட்டைத் தலையும், கந்தல் ஆடையுமாக வந்து அவனைச் சுற்றிக்கொண்டன. நாய்கள் குலைக்க ஆரம்பித்தன. பெண்கள் குடிசைகளை விட்டு வெளியே வந்து நின்று கொண்டு, 'பெரிய ஐயா பேரனா நீ! இதென்ன வேசம்?' என்றார்கள்.

குடியானவர்கள் ஓரிருவரிடம் அவன் பொதுவுடைமையைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

'நீ இன்னக்கி வந்து ஏதாச்சியும் சொல்லிப் புட்டு நாளைக்கிப் பட்டணம் பூடுவே. நாங்க இங்கே நிலைச்சுப் பயிர்த் தொழில் செய்ய வாணாம்? நீ சொல்றதெல்லாம் நடக்காது, சாமி!' என்றார்கள்.

உத்ஸாகம் குன்றி வியர்த்து விறுவிறுத்துப் பாலகிருஷ்ணன் ஒட்டுகிற வெயிலில் வீடுவந்து சேர்ந்தான்.

'ஏண்டாப்பா, இத்தனை நாழி? எங்கே போயிருந்தே? என்று ரேழித் திண்ணையில் உட்கார்ந்திருந்த பாட்டனார் கேட்டார்.

'இது சுத்த முட்டாள் ஊராயிருக்கே, தாத்தா!' என்றான் பால கிருஷ்ணன்.

'கிராம மெல்லாம் அப்படித்தான் இருக்கும். இங்கே படிப்பேது? சரி, போய் ஸ்நானம் செய்து விட்டுச் சாப்பிடு!'

★★★

('சாயாதேவீஸமேத ஸூர்யநாராயண ஸ்வாமினே தூபம் தரிசயாமி! அந்தச் சாம்பிராணியை எடுத்துக் காட்டறது!' என்று வாத்தியார் சொன்னார்.)

★★★

சாப்பிட்டுவிட்டுப் பாலகிருஷ்ணன் சராயும் சட்டையுமாக வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

'தாத்தா, படிக்க ஏதாவது புஸ்தகம் இருக்கிறதா?' என்று கேட்டான்.

'என்ன புஸ்தகம் வேணுமப்பா?'

'ஏதாவது அரசியல், பொருளாதாரம்–'

'என்னிடம் கிரந்த புஸ்தகங்கள் இருக்கு. தமிழில் தாயுமானவர், பட்டினத்தார், ராமலிங்க ஸ்வாமிகள் பாடல்களும் தேவாரம் திருவாசகமும் இருக்கு!'

'வேண்டாம்!' என்று சொல்லி முகத்தைச் சுளித்துக்கொண்டு அவன் தெருவைப் பார்க்கலானான்.

மாடுகள் மேய்ச்சலுக்குப் போய்க்கொண்டிருந்தன. பின்னால் மாட்டுக் காரன் அடிக்கடி 'இந்தா, இந்தா!' என்று கத்தி முன் போன மாடுகளைச் சரியான வழியோடு போகும்படிச் செய்து கொண்டே வந்தான். சாணி பொறுக்கும் சிறுமி ஒருத்தி சாணித்தட்டுடன் வந்தாள். வயலைச் சுற்றிக் கொண்டு வீடு திரும்பும் ரெட்டியார், வழியில் ஆற்றில் குளித்துவிட்டு வேஷ்டியைக் காற்றில் காய விட்டுக்கொண்டே போனார். தோட்டி – பொந்திலியன் – கிராம முன்சீப் வீட்டு வாசலுக்கெதிரில் வேப்பமரத்து நிழலில் கம்பளியைக் கீழே போட்டுக் கொண்டு கையும் கம்புமாக

உட்கார்ந்திருந்தான்.

'இந்த ஊரில் இவர்களுக்கெல்லாம் எப்படிப் பொழுது போகிறது?' என்று பாலகிருஷ்ணன் ஆச்சரியப்பட்டான்.

ஆற்றில் குளித்துவிட்டு ஈரப் புடைவையுடன் இடுப்பில் குடத்தை வைத்துக்கொண்டு வந்த பெண் ஒருத்தி அவனைப் பார்த்தவள், அவன் தன்னைப் பார்க்கிறான் என்று அறிந்தவுடன் வேகமாக நடந்து எதிர் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அந்த மாதிரிப் பெண்ணை அவன் பட்டணத்தில் பார்த்ததில்லை. வயசு பதின்மூன்று பதினாலுதான் இருக்கும். தளதளவென்று காட்டுக் கொடிபோல இருந்தாள். குடத்தை எடுத்துக்கொண்டு 'தாட், தாட்' என்று நடந்து போனாள். தலையில் கட்டு மயிர்; முகத்தில் சொட்டும் அழகு. பட்டணத்துப் பெண்கள் எல்லாம் தொட்டியில் வளரும் ரத்தம் வற்றிய வளர்ப்புக் கொடிகள்போல அவன் மனசில் பட்டார்கள் அப்பொழுது.

கிராமத்தில்கூட இந்த மாதிரி ஒரு கவர்ச்சி இருக்கிறதா என்று அவனுக்கு அது ஒரு புதுமைபோலத் தோன்றிற்று. அந்த மாதிரி ஒரு கிராமத்திற்கு ஒரு பெண் இருந்தால் கிராமாந்தரம் பாதகமில்லை என்று எண்ணினான். அரைகுறையாக அவள் பார்த்த அந்த ஒரு பார்வை – அதில் என்ன இருந்தது என்று அவனுக்குப் புரியவில்லை; ஆனால் அவன் கண் எதிர்வீட்டை விட்டு அகலவில்லை.

இந்தப் பெண் கம்யூனிஸ்டாக இருப்பாளா? கம்யூனிஸத்தில் பெண்கள் – சை – என்ன கம்யூனிஸம் எப்பப் பார்த்தாலும்!

அந்தப் பெண்ணின் பார்வைக்கு முன்பே கம்யூனிஸத்திற்கு இந்தக் கதி!

'அப்பா! உள்ளே போய் வேணும்னா செத்தெ படுத்துக்கோயேன்!'

கிழவரும் ஒரு காலத்தில் பையனாக இருந்தவர் தாமே?

'ஏண்டாப்பா, எதுராளாத்துலே ஒரு குட்டி இருக்கா–' என்று அவர் ஆரம்பித்தவுடன் பாலகிருஷ்ணனுக்குத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது.

'நல்ல குலம், கோத்திரம், இந்த வருஷம் அவா பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணியாகணும்னு தவிக்கறா. சரியான வரன் கிடைக் கல்லே. பிராமணன் நல்ல ஸத்து. தாயும் அப்படித்தான்; குட்டியும் படு சூடிகை. நாம் வேணுமானா கட்டிப் போட்டு வைப்பமா? உங்கப்பா வுக்கு எழுதியிருக்கேன்.'

'இல்லை, தாத்தா, நான்–'

'சரிதாண்டா, சொன்னேன்!' என்று விட்டுவிட்டார் கிழவர்.

சற்று நேரம் கழித்து எதிர்வீட்டிலிருந்து ஒரு மின்னல் புறப்பட்டு அவனைத் தாண்டிக்கொண்டு உள்ளே போயிற்று.

ரேழியில் பொடி உறிஞ்சிக்கொண்டிருந்த கிழவர், 'ராதே, எங்க

பாலகிருஷ்ணனைக் கல்யாணம் பண்ணிக்கறயா?' என்றார்.

'போங்கோ தாத்தா!' என்ற குரல் பாலகிருஷ்ணன் காதில் விழுந்து உள்ளத்தில் பாய்ந்து அவனை என்ன என்னவோ செய்துவிட்டது.

இன்னும் சற்றுக் கழித்துத் தாயி வந்தாள்.

'எப்போ வந்தே அப்பா?' என்று பாலகிருஷ்ணனைக் கேட்டுக் கொண்டே ரேழிக்குப் போனாள்.

'நேத்திக்கி வந்தேன், அம்மாமி!' என்று பாலகிருஷ்ணன் சொன்னான்.

'வா, தாயி, ஒம் பெண்ணே எங்க பாலகிருஷ்ணனுக்குக் கொடுத் துடேன்!' என்று ரேழியில் கிழவர் மறித்துக்கொண்டார்.

'பேஷாச் செஞ்சுக்கோங்களேன்! யாரைக் கேக்கணும்?' என்று புன்னகையுடன் சொல்லிக் கொண்டே அந்த அம்மாள் உள்ளே போனாள்.

★★★

('நைவேத்யானந்தரம் ஆசமனீயம் சமர்ப்பயாமி–தட்டிலே ஜலம் விடறது–இல்லை, ஸ்வாமி மேலே இல்லை,கீழே விடுங்கோ!' என்றார் வாத்தியார்.)

★★★

பாலகிருஷ்ணனுக்குத் திடீரென்று தாகம் எடுத்துவிட்டது. உள்ளே போனான். அங்கே கூடத்தில் உட்கார்ந்திருந்த ராதை சடக்கென்று எழுந்திருந்து சமையலறைக்குள் போய்விட்டாள்.

'பாட்டி, தீர்த்தம் வேணும்!'

'அடி பொண்ணே, அதோ சின்னக் குடத்திலே விழுப்பு ஜலமிருக்கு; அந்த வெங்கலத் தம்ளரில் கொண்டு வா!' என்றாள் பாட்டி.

குடத்துச் சத்தம், தம்ளர் சத்தம், ஜலம் விழும் சத்தம்–எல்லாம் இப்பொழுது பாலகிருஷ்ணன் காதுக்கு இன்னிசையாக இருந்தன. ராதை, புதுப்புடைவை ஒவ்வோர் அடியிலும் தடுக்க, தம்ளரைப் பாட்டியிடம் கொண்டு வந்து வைத்தாள்.

'நானா தீர்த்தம் கேட்டேன்? அப்படி வையேண்டி! பொண்ணைப் பார்க்க வாண்டாமோ?'

ராதை மெதுநடை நடந்து தம்ளரை ஜவான் போல, பாலகிருஷ்ணன் நின்ற இடத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டுத் திரும்பி உள்ளே போனாள்.

'அப்பா, உக்காந்து சாப்பிடு!' என்றாள் கிழவி. சராயுடன் அவன் எப்படித் தரையில் உட்காருவான் என்று அவளுக்குத் தெரியவில்லை. நின்றபடியே ஒரு வாய் ஜலத்தைக் குடித்தான். புரை ஏறிவிட்டது. கதவருகிலிருந்து மெல்லிய சிரிப்பொலி ஒன்று கேட்டது.

'யார் நினைச்சுக்கறா?' உங்கப்பாவுக்குத்தான் கடிதாசு போட்டிருக்கு.'

'என்ன போட்டிருக்கிறது பாட்டி?'

'முகூர்த்தம் எப்ப வச்சுக்கறது; லீவு எப்பக் கிடைக்கும்னுதான்.'

அதற்கு மேல் அவனுக்குத் தீர்த்தம் வேண்டியிருக்கவில்லை. அமிருத பானம் பண்ணினதுபோல ஆகிவிட்டது.

தம்ளரைக் கீழே வைத்துவிட்டுச் சிறிது தயங்கினான். வாசலுக்குப் போய்த்தான் ஆகவேண்டும். போனான். ரேழியில் கிழவரைக் காண வில்லை. பாலகிருஷ்ணன் வாசலில் பாரா கொடுத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

முதலில் தாயி வெளியே வந்தாள். மரியாதையாகத் தலை குனிந்து கொண்டு வீட்டுக்குப் போனாள். இரண்டு தடைகள் நீங்கிவிட்டன என்று பாலகிருஷ்ணன் கணக்குப் போட்டுக்கொண்டான். பாட்டி உள்ளே தான் இருப்பாள். ராதை அவனைத் தாண்டிக் கொண்டுதானே வீட்டுக்குப் போகவேண்டும்?

ராதையும் பொல்லாத பெண். ஓசைப்படாமல் ரேழி வரையில் வந்துவிட்டாள். வாசலில்தான் அவன் காதைத் தீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தானே?

நெருக்கடி ரேழியில் ஏற்பட்டுவிட்டது.

'ஏன் சிரித்தாய்?'

'வழி விடுங்கோ, யாராவது வருவார்கள்!'

'வரட்டும், சொல்லு!'

'வெறுமனேதான்!'

'சொன்னாத்தான்!'

'சராயைப் பார்த்துச் சிரிப்பு வந்தது!' என்று சொல்லிவிட்டு ராதை மறுபடியும் சிரித்தாள்.

பிறகு பாலகிருஷ்ணனுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா?

'ஐயையோ, யாராவது–' என்று ஆனந்தத்தில் முணுமுணுத்தாள் ராதை.

பாலகிருஷ்ணன் விடாக்கொண்டனாகிவிட்டான்.

'விடுங்களேன்' என்றாள் ராதை.

தெருவில் கிழவர் இருமலைக் கேட்டு, பாலகிருஷ்ணன் பிடியைத் தளர்த்தினான். ராதை ஓடியே போய்விட்டாள்.

பாலகிருஷ்ணன் உள்ளே போய்ச் சராயைக் கழற்றி எரிந்துவிட்டு வேஷ்டி உடுத்துக்கொண்டான்.

'ஏண்டா, சராய் எங்கே?' என்றாள் பாட்டி.

'கஷ்டமாக இருக்கிறது பாட்டி!'

அன்றே ஆரம்பித்துவிட்டது ராதையின் ஆட்சி!

★★★

'சூரியநாராயணஸ்வரூபஸ்ய பிராம்மணஸ்ய இதமாஸனம்–'

ராதை அவன் கையில் தாம்பூலத்தை எடுத்துக் கொடுத்தாள். ஒரு கையால் அதை அவன் வாத்தியாரிடம் நீட்டினான்.

'இரண்டு கைகளாலும் கொடுங்கோ!'

கொடுத்துவிட்டுத் திரும்பினான் பாலகிருஷ்ணன்.

'வாத்தியாருக்கு நமஸ்காரம் பண்ணுங்கோ!' என்று ராதை தானும் கூட நமஸ்காரம் செய்தாள்.

'சீக்கிரமேவ சுப சந்தானப் பிராப்திரஸ்து!' என்று வாத்தியார் ஆசீர்வாதம் செய்தார்.

வாத்தியார் வெற்றிலை பாக்கு வகையறாக்களை முடிந்துகொண்டு மறுபடியும் ஓட்டத்தை ஆரம்பித்தார்.

'இலை போட்டாச்சு, வாங்கோ!'

பாலகிருஷ்ணன் இலையில் உட்கார்ந்தான்.

'சாதம் வச்சதும் நித்தியம்போல ஆபோசனம் வாங்கிக்கப்படாது. நெய் அபிஹாரம் செய்து விட்டு ஆபோசனம் போடுகிறேன்!' என்று ராதா சீக்கிரமாகப் பரிமாறி ஆபோசனம் போட்டாள்.

'பொங்கலை முதலில் சாப்பிடுங்கோ! நன்னாருக்கா? பால் நன்னாப் பொங்கித்து!'

'நன்னாப் பொங்கினால்?' என்று பாலகிருஷ்ணன் கேட்டான்.

'நன்னாப் பொங்கினால் நல்லது!' என்று ராதை புன்னகையுடன் சொல்லிவிட்டுக் கரும்பை நறுக்க ஆரம்பித்தாள்.

'சாப்பிட்டதும் கரும்பு தின்னுட்டு வெற்றிலை போட்டுக் கொள்ளுங்கள்!'

'ஏன்?'

'ஏன்னா, சாஸ்திரம்!'

'இதெல்லாம் சாஸ்திரத்தில் எழுதிவைத்திருக்கிறதோ?'

'எழுதி வைத்தால்தான் சாஸ்திரமா என்ன? நல்லதெல்லாம் சாஸ்திரம்!'

'உன்னுடைய சாஸ்திரமாக்கும். அதன்படி நான் நடக்க வேண்டும்!'

'நடக்க வேண்டாமா? பின் எதற்காக கல்யாணம் செய்துகொண்டீர்கள்?

'உனக்குத் தோப்புக்கரணம் போடவா?' என்று பாலகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே இலையை விட்டு எழுந்திருந்தான்.

'மோர் விட்டுக்கல்லியா?'

'வயிறு நிரம்பிவிட்டது. பொங்கல் நிறையப் போட்டுவிட்டாய்! நீ சாப்பிட உட்கார்.'

'நான்தான் சொன்னேனே. சாதமே செல்லவில்லை. வாயிலெடுக்க வருகிறது. கொஞ்சம் பொங்கல் சாப்பிட்டுவிட்டேன்.'

'என்ன உடம்பு உனக்கு?'

'உடம்பா? சொல்லுகிறேன். நாளைக்கு ஊருக்கு கடுதாசு எழுதலாம்.

பாலகிருஷ்ணன் சிறிது நேரம் அப்படியே நின்றான். பிறகு சட்டென்று அவளிடம் போய் 'ராது, ராது, நான் சுத்த முட்டாள்! ஒண்டியாக நீ இவ்வளவு காரியம் செய்கிறாயே!' என்று பதறினான்.

ராதா சிரித்துக்கொண்டு, 'அடுத்த வருஷம் ஒரு கரும்பு போராது, இரண்டு வேணும்!' என்று ஒரு கரும்புத் துண்டை அவன் வாயில் போட்டாள்.

'ராதா, என்ன தித்திப்பு!'

'எது?'

'இந்தக் கரும்பு–உன் பேச்சு–உன் உத்தரவு'.